# நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு

JUN 1971 ... LIBRARY

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU

Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 122

யாழ்ப்பாணம் வைகாசி 31 ரபீஉல் 20 திங்கட்கிழமை (14-6-71)

கோட்டை, ஞாயிறு

நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும்வகையில் மூன்று புதிய கைத்தொழில்களை பெட்ரோலியம் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கவிருக்கிறது.

பெற்றோலியம் கழிவுப் பொருட்களைக் கொண்டு நைலோன் இழைகளை உருவாக்கும் தொழில் இதில் பிரதான மானதாக விளங்கும் இந்த இழைகள் மீன்பிடி வலைகள் செய்வதற்கு பயன்படும்

அடுத்த கைத்தொழில் எரிபொருள் தாங்கிகளை செய்வதாகும். தகரங்களைத் திருத்தும் வேலைகளும் ஆரம்பிக்கப்படும் பிளாஸ்டிக்பெட்டிகள் தயாரிப்பது அடுத்த கைத்தொழிலாகும். இந்தக் கைத்தொழில்களுக்கு சுமார் 50லட்சம்ரூபா தேவைப்படுமென்று தெரிகின்றது கைத்தொழிற்சாலைகள் ... ஸ்தாபனம் எதிர்பார்க்கின்றது.

## ருமேனியாவிலிருந்து மல்லி இறக்குமதி

கோட்டை, ஞாயிறு

ருமேனியாவிலிருந்து கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் 1200தொன் மல்லியை இறக்குமதிசெய்துள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மல்லித்தட்டுப்பாடு இதனால் நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட இந்த மல்லி கூ மொ விடிப் போக்கள் சந்தைப்படுத்தும் திணைக்கள விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

# 'பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சிமுறைதான் தேவை'

## காங்கேசன்துறை, கொழும்பு ரயில் சேவைகள்

கோட்டை, ஞாயிறு

நாளை (14ம் திகதி) தொடக்கம் காங்கேசன்துறைக்கும் கோட்டைக்குமிடையில் ஒரு சாதாரண ரயில் சேவை ஆரம்பமாகவிருக்கிறது.

கோட்டையிலிருந்து காலை 7-45க்கு புறப்படும் ரயில் காங்கேசன்துறைக்கு மாலை 6-48க்கு வந்தடையும் காங்கேசன்துறையிலிருந்து 6-30க்கு புறப்படும் ரயில் மாலை 7-15க்கு கொழும்பு வந்தடையும். கொழும்பிலிருந்து காலை 6-40க்குப் புறப்படும் யாழ்தேவி நண்பகல் 2-40க்கு காங்கேசன் துறையை வந்து சேரும், காங்கேசன்துறையிலிருந்து நண்பகல் 12 மணிக்கு புறப்படும் யாழ்தேவி இரவு 8-08 மணிக்கு கொழும்பை அடையும். கொழும்பிலிருந்து 11-55க்குப் புறப்படும் உத்தரதேவி இரவு 8-06மணிக்கு காங்கேசன்துறையை அடையும். காங்கேசன்துறையிலிருந்து காலை 6-10க்குப் புறப்படும் உத்தரதேவி நண்பகல் 2-40க்கு கொழும்பை வந்தடையும்.

'கொலை நடந்தபொழுது

## சாரதியும் கண்டக்டரும் ஓட்டம் பிடித்தார்கள்'

### பத்தேகம நால்வர் கொலைவழக்கில் சாட்சியம்

காலி, ஞாயிறு

பஸ்ஸில் வைத்து எதிரிகள் காலஞ்சென்றவர்களை கத்தியால் குத்தியபொழுது பிரயாணிகள் 'கொலை கொலை' என்று கத்தினார்கள் என்றும் சாரதியும் கண்டக்டரும் ஓட்டம் பிடித்தார்களென்றும் பத்தேகம நால்வர் கொலைவழக்கில் சாட்சியளித்த எழுபது வயதான பபேசாமி என்பவர் கூறினார்.

காலி அசைஸ் கோர்ட்டில் அசைஸ் கமிஷனர் டி கியூ. எம். சிறீமானே முன்னிலையில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஒரே குடும்பத்தை சேர்ந்த தகப்பன், தாய், மகன், மகள் ஆகிய நால்வரையும் கொலைசெய்ததாக ஏழு இளைஞர்கள்மீது இவ் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. மேசட்டார் மெஜிஸ்திரேட்டான எம் ஏசி. ஏபபேசாமி தமது சாட்சியத்தில் பின் வருமாறு சொன்னார்,

சம்பவதினம் குறிப்பிட்ட பஸ்ஸில் பத்தேகமவுக்குநான் போகவிருந்தேன். நான்பஸ்ஸில் அமர்ந்திருந்தபொழுது சனங்கள் ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டுமிருந்தார்கள். காலஞ்சென்றவர்களை அன்றுதான் முதன்முதலாகப் பார்த்தேன், கூடப்பால ஜெட்றிக்கோ பஸ்ஸில் அமர்ந்திருந்தார். இரண்டு பெண்கள் ஒன்றாக அமர்ந்திருந்தார்கள். இம்பியெல என்ற இடத்தில் கத்திக்குத்து நடந்தது.

சாறசட்டை போட்டு நீண்ட கைச்சட்டை அணிந்த ஒருவரும் சாரம்கட்டிய ஒருவரும் பஸ்ஸில் இருந்தார்கள், சாரம் கட்டியிருந்தவர் கையில் கத்தியிருந்தது. கத்திக்குத்து நடைபெற்றபொழுது பிரயாணிகள் 'கொலை கொலை' என்று கத்தினார்கள், பலர் இறங்கி ஓடினார்கள்.

நான் கொஞ்சநேரம் பஸ்ஸில் இருந்தேன், கண்டக்டரும் சாரதியும் ஓட்டம்பிடித்தார்கள், வயதுபோன கிழவியையும் அதே இருவரும் குத்துவதைப் பார்த்தேன். கிழவர்பாதையைக் கடக்க முயற்சிசெய்த பொழுது அவரும் குத்தப்பட்டு வீதியில் விழுந்தார்.

காற்சட்டை போட்டவரிடம் தம்மைக் கொல்ல வேண்டாமென கிழவன் கெஞ்சினார். எதிரிகள் என்னிடம் வந்து எங்களுக்கெதிராக சாட்சியம் சொல்லப் போகிறாயா என்று கேட்டார்கள், நான் இல்லை என்றேன். பின்னர் செல்வி நந்தா ஜெட்றிக்கோவைப் பார்த்து 'இதோ அந்தப் பெட்டை' என்று ஒருவர் சொன்னார். எங்கள் அண்ணனைக் கொன்றபிறகு உன்னை உயிரோடு விடமாட்டோம் என்று அவர்கள் சொன்னார்கள். அந்த இளம் பெண் கிணற்றடிக்கு ஓடிக்கொண்டே என்னைக் கொல்கிறார்கள் என்று கத்தினாள், விசாரணை தொடர்கிறது

## அரசியல் நிர்ணயசபையில் பீலிக்ஸ் டயஸ்

கோட்டை, ஞாயிறு

பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சிமுறைதான் இலங்கைக்குத் தேவையென்று பொது நிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன்று அரசியல் நிர்ணய சபையில்கூறினார்

புதிய அரசியல் திட்டத்துக்கான அடிப்படைத் தீர்மானங்களில் ஆறாவது தீர்மானத்துக்கு ஐக்கிய தேசியக்கட்சியினர் சமர்ப்பித்துள்ள திருத்தப்பிரேரணையின்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு திரு பீலிக்ஸ்டயஸ்பண்டாரநாயக்கா பேசினார்

பல அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளை அமைப்பதின் மூலம்ஜனநாயகம் பாதுகாக்கப்படுமா என்று அவர்வினவினார். இலங்கைக்கு பிரதிநிதித்துவ ஜனநாயக அமைப்பு ஒன்றே தேவை. அதை பெறுவதற்காகவே நாம் பாடுபடவேண்டும் என்று அவர் சொன்னார்

திரு. ஜே ஆர் ஜெயவர்த்தன பேசுகையில் தற்போதைய தேர்தல் முறைகளில் பல குறைபாடுகள் இருக்கின்றனவென்றும் இக் குறைபாடுகளை புதிய அரசியல் திட்டத்தில் நிவர்த்தி செய்துகொள்ளவேண்டுமென்று குறிப்பிட்டார்.

அரசியல் அமைப்பு விவகாரங்கள் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா பேசுகையில் தேர்தல் தொகுதி நிர்ணயங்கள் சம்பந்தமாக தற்போதுஇருந்துவரும்சட்டங்களே எதிர்காலத்திலும் பயன்படுத்தப்படும் என்றார்.

திருத்தப் பிரேரணையை ஐக்கிய தேசியக்கட்சியினர் வற்புறுத்தவில்லை அதனால் அதன் மீதுவாக்கெடுப்பு நடைபெறவில்லை.

அரசியல் நிர்ணய சபை மீண்டும் இம்மாதம் 17-ம் திகதிகாலை 10 மணிக்கு கூடும்.

## ஒரே சூலில் 9 குழந்தைகள்

சிட்னி, ஜூன் 13

ஆஸ்திரேலியாவில் பெண் ஒருவர் ஒரே சூலில் 9 குழந்தைகளைப் பெற்றெடுத்திருக்கிறார் இந்தப் பெண்மணிக்கு 29வயது குழந்தைகளில் 4 பெண்கள் 5 ஆண்கள். இரண்டு குழந்தைகள் இறந்தே பிறந்தன. மற்ற ஏழும் உயிர்வாழக்கூடும் என்று டாக்டர்கள் நம்புகிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் இரண்டு றாத்தல் எடையுள்ளதாகவிருக்கிறது.

ஆஸ்திரேலியாவின் சரித்திரத்திலேயே இப்படிஒரேசூலில் இத்தனை குழந்தைகளை எவரும் பெற்றதில்லையாம். இந்தக் குழந்தைகளைப் பெற்ற தாய்க்கு பரிசுகள் வழங்குவது பற்றி ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆலோசிக்கிறது.

## விண்ணிலிருந்தே வாக்களித்தனர்

மாஸ்கோ, ஜூன் 13

சோவியத் விண்வெளி ஆராய்ச்சி நிலையமான சலூயூட்டில் உள்ள வீரர்கள்மூவரும் இன்று விண்வெளியில் இருந்தபடியே சோவியத் நாடு முழுவதும் நடைபெறும் ஆட்சிமன்றத் தேர்தலில் வாக்களித்தனர். தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திற்கு வீரர்கள் மூவரும் சைகைமூலம் தங்கள் வாக்குகளை தெரிவித்தனர், வீரர்கள் மூவரும் இன்று ஓய்வு எடுத்துக் கொண்டனர்.

## சிங்களத் தேர்ச்சிபெற அரசாங்க ஊழியர் ஆர்வம்

கோட்டை, ஞாயிறு

அரசாங்க மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு சிங்களத்தில் தேர்ச்சியளிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றியளித்திருப்பதாக தெரிகிறது

சிங்களத்தேர்ச்சி பெறுவதற்கு அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்கள் பெரும் ஆர்வம் காட்டுகிறார்கள் என்றும் இந்தப் பயிற்சிகளுக்கு ஏராளமானவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதுவரை 8 ஆயிரம் பேர் சிங்களத்தேர்ச்சிக்கு தங்களைப் பதிவுசெய்திருக்கிறார்களாம்.

## பஞ்சாப் சட்டசபை கலைக்கப்பட்டது

புதுடில்லி, ஜூன் 13

இந்தியாவில் பஞ்சாப் மாநில சட்டசபை கலைக்கப்பட்டுவிட்டது திரு.பிரகாஷ் சிங் பாதல் தலைமையிலான மந்திரிசபை பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து சட்டசபை கலைக்கப்பட்டது.

**JAFFNA SECURITY SERVICES**

எல்லா வகையான பாதுகாப்பும்,
காவல் வேலைகளும் நாம் பொறுப்பேற்று
நடத்துவோம்.
விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்!
அதிபர்
46, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்,
2842

---

உன்னத விற்பனவு

**ஞானசுரபி புத்தகக் கம்பெனி**

தமிழ்ப் பெருமக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த
தமிழ்நாட்டு
இலக்கியங்கள் - கதைகள் - கட்டுரைகள் - ஆய்வுநூல்கள்
பாடசாலைப் புத்தகங்கள்
மற்றும் பாடசாலை நூல்நிலையத்திற்குரிய
அத்தனை நூல்களும் வீண் கட்டணமின்றி
விற்பனவாகின்றன.
உங்கள் அறிவுப்பசியைத் தீர்த்துக்கொள்ள
அன்புடன் அழைக்கின்றோம்

**ஞானசுரபி புத்தகக் கம்பெனி**

237, மின்சாரநிலையவீதி. — யாழ்ப்பாணம் 2843

---

**ராணி** (யாழ்ப்பாணம்)
ஜோதி கணேஷன் கே. ஆர். விஜயா
தினசரி காலை10-00 பி.ப. 2-00 5-00 நடித்த

# ராமன் எத்தனை ராமனடி

---

**றீகல்** (யாழ்ப்பாணம்)
காலை 10-30 பி.ப.2-30
முத்துராமன், தேவிகா, நாகேஷ், சோ
நடித்த

## தேவி

'தேவி ஸ்ரீ தேவி' பாடலை இத்திரேட்டரின்
(Westrex Sound)க் கேட்டு மகிழுங்கள்

Daily at 6-00 p. m. Only
Ursula Andress
in
THE SOUTHERN STAR
(Color)

---

**வெலிங்டன்** யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-15, பி. ப. 2-00, 5-15 மணி

★ ஜெய்சங்கர்
★ வாணிஸ்ரீ
★ லக்ஷ்மி
நடித்த

# கன்னிப் பெண்

**கெப்பிட்டல்**
காலை 10, பி.ப.2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

**றிக்ஸ்லி**
காலை 10, பி.ப.2-00 மணி
பாலும் பழமும்

**ஈமலன்**
காலை 10, பி.ப.2-00 மணி
பார் மகளே பார்

**பிளாசா**
காலை 10, பி.ப.2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

---

## வரி விளம்பரம்

**தேவை**

தளபாடங்கள் பொலிசிங் செய்ய அனுபவம் உடையவர்களும் கச்சத் தொழில் கல்லூரியில் பயின்ற அனுபவம் உள்ளவர்களும் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். மெடேன் பேனிச்சர், 79/8, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன் 7364. 3183

**விற்பனைக்கு**

நல்ல நிலைமையிலுள்ள 5 ஸ்ரீ 9558 இலக்க முடைய பண்டம் 1-75 B. S. A. மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. க. நல்லையா, S. R. S. 216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன் 296. 3182

பருத்தித்துறைப் பகுதி தும்பளை நெல்லண்டை. வால்ரன் ரோட்டில் (Walton Road) 5 3/4, பரப்பு கடற்கரைக்கண்மையில் நல்ல சுற்றுடலும் எல்லா வசதிகளும் கொண்ட காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க லாண்ட்ரேட்ஸ் (Land Trades) 35, பிரதான வீதி, யாழ்ப்பணம். 3184

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

---

**நாகம்ஸ்சினிமா**
சுன்னாகம்
தினசரி பி.ப 2-00, 5-45
எம்.ஜி.ஆர் - அஞ்சலிதேவி
நடித்த
**மர்மயோகி**
(புதிய கொப்பி)

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி பி.ப 2.30, 5-30
ஜெய்சங்கர்-விஜயநிர்மலா
நடித்த
**உயிரா மானமா**

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி பி.ப 2-30, 6-00
ராஜன் - நிர்மலா
நடித்த
**சக்கரம்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 5-30
எம். ஜி. ஆர் — பானுமதி
நடித்த
**மலைக்கள்ளன்**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
முத்துராமன் — லக்ஷ்மி, நாகேஷ் — ராகினி
தினசரி காலை 10-30, பி. ப. 2. மாலை5.30 நடித்த

# நவக்கிரகம்

---

நாரந்தனைக் கிராமசபை

## கேள்வி விளம்பரம்

கீழ்க்காணும் அட்டவணையிற் குறிப்பிட்ட வேலைகளுக்கு நாரந்தனைக் கிராமசபைத் தலைவரால் 1971-ம் ஆண்டு ஆனி மாதம் 26-ம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணி வரையும் ஸ்தலதாபன பகுதியால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 25-6-71-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை இச்சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரக் கட்டுப்பணங்கள் அட்டவணையிற் குறிப்பிட்டபடி செலுத்தியதின் பேரிலேயே கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும். பத்திரக் கிரயப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேலும் விபரங்களை அறிய விரும்பின் கிராமசபை அலுவலகத்திலும் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

அட்டவணை

| வேலையின் பெயர் | கே. ப. பணம் | கே. ப. பி. பணம் |
|---|---|---|
| 1. ஈச்சமோட்டு வீதி வேலை | 10-00 | 25-00 |
| 2. காளிகோயில் ஒழுங்கை வேலை (2-ம் வட்டாரம்) | 10-00 | 25-00 |
| 3. தென்னிலைகளான் ஒழுங்கை | 10-00 | 25-00 |

த. சண்முகலிங்கம்
தலைவர்,
கிராமசபை,
நாரந்தனை.

கிராமசபை அலுவலகம்,
நாரந்தனை.
ஊர்காவற்றுறை,
11-6-71.
2839

---

வித்துவான் F. X. C. நடராசா அவர்கள் எழுதிய

## காரைநகர் மான்மியம்

காரைநகர் பற்றியும்
காரைநகரில் வாழ்ந்த பெரியார்கள் பற்றியும்
முழுத் தகவல்கள் அடங்கிய முதல் நூல்
விலை ரூபா: 5.00 தபால் செலவு சதம்: 50
கிடைக்குமிடம்:

ஆ. நடராசா
98, விவேகானந்தர் மேடு,
கொழும்பு—13.

ஜெயபாகன் அன் கோ.,
225, கே கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

2622

---

### வருடாந்த உற்சவம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு ஊர்காவற்றுறைத் தொகுதியில் பிரசித்தி பெற்றசைவ ஆலயங்களில் ஒன்றான புளியங்கூடல் மகாமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் சென்ற 11-ந்திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இம்மாதம் 19-ந் திகதி நடைபெறும் தேர்த்திருவிழாவுடன் உற்சவம் முடிவடையும்.

---

### கேள்வி விளம்பரம்

ஊர்காவற்றுறைப் பட்டினசபை

கதிரேசன் கோவில் வீதி திருத்த வேலைக்கு 21-6-71ம் திகதி முற்பகல் 10-00 மணி வரை "சீல்" வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரப் பணம் ரூபா 10-00ம் பிணைப்பணம் ரூபா 50-00ம் செலுத்துவதன் பேரில் 20-6-71 பிற்பகல் 2-00 மணி வரை இவ் அலுவலகத்தில் கிடைக்கப்பெறும் பத்திரத்தில் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிகமான விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. இம்மானுவேல்,
தலைவர்,
பட்டினசபை,
ஊர்காவற்றுறை.

பட்டினசபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
12-6-71. 2844

---

### இடமாற்றம்

பருத்தித்துறை, ஞாயிறு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு. பி. சின்னத்தம்பி ரூகலை மகா வித்தியாலயத்திற்கும், மாத்தளை இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. ரி. பரராசசிங்கம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கும் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

---

இப்பொழுது திரையிடப்படுகிறது!

**யாழ். வின்ஸர் திரையில்**

தினசரி காலை 10-30, பி. ப. 2-00 மாலை 5-00 மணி

★ ஜெய்சங்கர் ★ பாரதி ★ சுந்தரராஜன்
★ நம்பியார் ★ நாகேஷ்
நடித்த

# நில்! கவனி!! காதலி!!!

# 'கி. வங்க அகதிகள் பிரச்னை அனைத்துலகப் பிரச்னை'

## இந்திராகாந்தி கூறுகிறார்

தூரா.ஜூன்.13

நமது நாட்டில் தஞ்சம்புகுந்துள்ள 50 லட்சம் கிழக்குவங்க அகதிகள் பிரச்னை பாரதத்தின் பிரச்னை மட்டுமல்ல, அனைத்துலகப் பிரச்னையுமாகுமென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி சொன்னார்.

இந்திரா நேற்று அஸாமிலும், மேகாலயாவிலும் சுற்றுப்பயணம் செய்து அகதிகள் முகாம்களைப் பார்வையிட்டார். மேகாலயாவில் பிரதமர் இந்திராகாந்தி கூட்டமொன்றில் உரையாற்றினார்.

சர்வதேச நெருக்குதல் ஏற்படும்போதுதான் பாகிஸ்தான் சண்டையைக் கைவிடுமென்றார். திருமதி இந்திரா மேலும் பேசுகையில் கூறியதாவது:

"கிழக்கு வங்காளத்தில் ஏற்பட்டுள்ள இரத்தக்களரி பற்றி உலகெங்கும் கண்டனக்குரல் எழுப்புவதுடன் மட்டும் நின்றுவிடாது பாகிஸ்தானை ஒடுக்க வேண்டும். லட்சோபலட்சமக்கள் தங்கள் வீடுவாசல்களை விட்டு குழந்தைகுட்டிகளுடன் அகதிகளாகவந்துள்ளார்கள். இவர்கள் பிரச்னை எமக்கு மேலும் கஷ்டத்தை ஏற்படுத்தினாலும், மக்கள் பரிவுணர்வுடன் அகதிகள் பிரச்னையைக் கவனிக்க வேண்டும். மனித வரலாறு காணாத ஒரு சோகச் சம்பவம் 50 லட்சம் அகதிகள் இந்தியா வந்தது. இந்த நிலையை நம்பிக்கையுடனும் துணிச்சலுடனும் சமாளிக்க வேண்டும். நிலைமை சீரடைந்ததும் அகதிகளைத் திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

## "நாய்களைப்போல் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்"

பாரிஸ், ஜூன் 13

கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் நாய்களைப்போல் கொல்லப்படுகிறார்கள் என்று பாரிஸிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்று முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகையின் டாக்காவிலுள்ள அதன் நிருபர் எழுதியுள்ள செய்தியொன்றில் இப்படிக்குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலை வீரர்களால் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதையடுத்து பொதுமக்களில் 40 பேர் தீப்பந்தத்தால் எரிக்கப்பட்டுசித்திரவதைசெய்து பலியாக்கினார்களென்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு வங்கத்திலுள்ள மக்கள்படும் துன்பத்தையும் துயரத்தையும் சொல்லில் விபரித்துவிடமுடியாது என்றும், இரவு வருமுன்னரே வீட்டின் மூலைமுடுக்குகளில் மக்கள் ஒழிந்துவிடுகிறார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

நாய்களிலும் கேவலமாக சுட்டுக் கொல்லப்படுகிறார் என்றும் அந்தச் செய்தி கூறுகிறது.

## அரசாங்கத்துக்கு பாராட்டு

பருத்தித்துறை, ஞாயிறு

"தீயசக்திகளினின்றும் நாட்டையும் ஜனநாயகத்தையும்பாதுகாத்த பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்காவுக்கும், அவரது அரசாங்கத்திற்கும் நாம் மட்டுமன்றி, வரப்போகும் சந்ததியினரும் கடமைப்பட்டுள்ளோம். வரலாறு கண்டிராத இந்நெருக்கடியான கட்டத்தில், அமைதியையும், ஒழுங்கையும் மீண்டும் பூரணமாக நாட்டில் நிலவச் செய்ய நாம் அரசியல் வேறுபாடின்றி அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு அளிக்கவேண்டியது மிக அவசியம்."

இவ்வாறு கோவிற்கடவை கிராம முன்னேற்றச் சங்கப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய சங்கத்தலைவர் திரு வி. தங்கராசா குறிப்பிட்டார்.

நாட்டைப் பாதுகாப்பதில் தமது உயிர்களைப் பலி கொடுத்தவர்களுக்கு ஓர் அனுதாபத் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

# அரசியல் உடன்பாடு ஏற்பட வேண்டும்

வாஷிங்டன், ஜூன் 13

கிழக்குவங்காளத்தில் சகஜநிலை உருவாக அரசியல் உடன்பாடு ஏற்படவேண்டுமென்று அமெரிக்க வெளியுறவுமந்திரி திரு ஜோசெப் ஸிஸ்கோ தெரிவித்தார்.

கிழக்குவங்கப்பிரச்னை உலகத்தில் என்றுமே நடக்காத ஒரு கோரச் சம்பவம். இந்தப் பிரச்னை சுமுகமாகத் தீர்ந்து சகஜநிலை ஏற்பட தலைவர்களிடையே சமரசம் ஏற்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

## ஆறுயிரம் கிராமங்கள் எரிந்து சாம்பலாகியது!

முஜிப்நகர், ஜூன்.13

வங்காள தேசத்தில் சண்டையிட்டுவரும் பாகிஸ்தான்ராணுவத்தினர் அங்கு ஆறுயிரம் கிராமங்களைத் தீவைத்து சாம்பராக்கி விட்டார்கள். இந்தக் கிராமங்கள். சுடுகாடுகளாகக் காட்சியளிக்கின்றன. கொள்ளையடித்தும், வீடுகளை இடித்தும், மேலும் 4 ஆயிரம் கிராமங்களைத் தரைமட்டமாக்கி விட்டனர்.

உள்நாட்டுப் போர் தொடங்கிய 75 நாட்களில் இந்த அக்கிரமம் நடந்துள்ளது. இதனால் 50 லட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளார்கள். சுதந்திர வங்காள தேச அதிகாரி ஒருவர் கிழக்கு வங்கம் முழுவதையும் சுற்றிப்பார்த்தார். சுற்றிப்பார்த்த பின்னர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் மேற்கண்ட தகவல்களைச் சொன்னார்.

# பள்ளிகளில் உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் அளியுங்கள்!

## நெடுஞ்செழியன் கூறுகிறார்

சென்னை, ஜூன் 13

பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் உடற்பயிற்சிக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். நல்லமுறையில் கவனமாகத்திட்டமிட்டு இக்கல்வியை மாணவர்களுக்கு வழங்கவேண்டும்

தமிழ்நாடு உதைபந்தாட்டச்சங்கத்தின் விசேஷகூட்டமொன்றில் உரையாற்றுகையில் தமிழ்நாடு கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: மாணவர்மனதில் ஜனநாயக மனப்பான்மை, ஒத்துழைப்பு, சகிப்புத்தன்மை முதலியவற்றை பதியத்தக்க வகையில் உடற்பயிற்சிக் கல்வித்திட்டம் விரைவாகத் திட்டப்படவேண்டும். இத்திட்டத்தினால் ஒரு சிலருக்குமட்டுமன்றிப் பலருக்கு நன்மையேற்படவேண்டும்.

## புத்தூர் கி.ச. தலைவர்

யாழ்ப்பாணம், திங்கள்

புத்தூர் கிராமசபைத்தலைவராக திரு. முத்துச்சாமி திருநாவுக்கரசு உள்ளூராட்சி உதவி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைவர் தெரிவில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கூட்டிய மகாநாடு ஒன்றில் ஏற்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது.

திரு. திருநாவுக்கரசு புத்தூர் கிராமசபையின் அங்கத்தவராகக் கடந்த பதினொரு வருடங்களாகப் பணியாற்றியுள்ளார். சமூக சேவையாளரான இவர் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் ஸ்தாபன அங்கத்தினர்களிலொருவராவார்.

## நெசவுநிலையத்தில் திருட்டு

குருநகர், ஞாயிறு

மண்டைதீவு நெசவு நிலையத்தில் 1000 ரூபா பெறுமதியானசைத்தறியுடைவைகள் திருட்டுப்போயுள்ளன. இத்திருட்டு வெள்ளிக்கிழமை இரவு நடந்துள்ளது. இந்தநெசவுநிலையப்பொறுப்பாளர் யாழ்ப்பாணம்பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அஷ்ட திக்கு

### திருவாரூர் தேர்

திருவாரூர்க் கோயில் புதிய தேர் சென்ற 5ந் தேதி அதிகாலையில் தீப்பிடித்து எரிந்தது. அடிப்பாகத்தில் இரும்புத் தகடுகள் போட்டிருந்ததால் தீ மெதுவாகவே பரவியது. தேர் எரிவதைப் பார்த்து உடன் அறிவித்த ஒரு டிரைவருக்கு அரசாங்கத்தின் சார்பாக ரூபா 50 பாலிஸ் மூலம் பரிசு அளிக்கப்பட்டது. கோவில் டிரஸ்டி தியாகராஜ முதலியார் அந்த டிரைவருக்கு ரூபா 500ம், தீயை அணைப்பதில் பெரிதும் உழைத்த இருவருக்குத் தலா ரூபா 250ம் பரிசளித்தார்.

தேருக்குப் பக்கத்தில் ஒரு 'கிரஸின்' போத்தல் இருந்ததைப் பார்த்ததும் இது சில நாசகாரிகளின் சதிவேலையென்று நம்பப்படுகிறது. போலிஸார் புலன் விசாரணை செய்துவருகின்றனர். பல வருடங்களுக்கு முன் பழைய தேருக்குத் தீ மூட்டப்பெற்று நாசமாகியதால் புதிய தேர் கட்டப்பட்டுள்ளது. சென்ற மாதம் தான் புதுத் தேரில் ஸ்ரீ தியாகராஜ சுவாமி புறப்பட்டு வெற்றிகரமாக நிலைக்கு வந்துசேர்ந்தார்.

0 0 0

### பாலக்காடு மணி

மிருதங்க வித்வான் பாலக்காடு மணி அவர்கள் இனி ஒலிபெருக்கி வைக்கும் கச்சேரிகளில் கலந்துகொள்ளப் போவதில்லையாம். ஒலிபெருக்கி இசையின் இனிமையைக் கெடுத்துவிடுகிறதென்பது அவர் கருத்து. அவர் திருவையாறு ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் விழாக் காரியதரிசியாக இருக்கையில், அவ்விழா நிகழ்ச்சிகளை இதே காரணத்துக்காக ஒலிபரப்பக்கூடாதென்று வாதித்தார். ஆனால் அவரது இக்கருத்து ஒப்புக்கொள்ளப்படவில்லை. அதனால் அவர் காரியதரிசி பதவியிலிருந்து விலகினார். இப்போது ஒலிபெருக்கிவைக்கும் கச்சேரிகளில் தாம் வாசிக்கப்போவதில்லையென்று தீர்மானித்துள்ளதால் அவரது மிருதங்க வாசிப்பைக் கேட்கும் வாய்ப்பு பலருக்கும் இனி இல்லாது போகலாம். ஒலிபெருக்கி இல்லாமல் இக்காலத்தில் யார்தான் பாட முன்வருகிறார்கள்?

0 0 0

### தலைமன்னார்க் கப்பல்

இலங்கையில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதால், இந்தியா-இலங்கைக் கப்பல் பிரயாணிகள், கப்பலிலேயே ஓர் இரவு தங்கி இருக்கவேண்டியிருக்கும். இந்தியக் கப்பல் கூட்டுத்தாபன மனேஜர் இதை அறிவித்து கப்பல் போக்குவரத்தின் புதிய நேர மாறுதல்களைத் தெரிவிக்கிறார்.

இலங்கைக்குச் செல்லும் பிரயாணிகள் ராமேஸ்வரத்தில் இப்போது வியாழன் அன்று காலை 6 மணிக்குக் கப்பல் ஏறவேண்டியுள்ளது. இனி மத்தியானம் 2 மணிக்குக் கப்பல் ஏறவேண்டியிருக்கும் இப்பிரயாணிகள் வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்குத் தலைமன்னாரில் இறங்குவர். அங்கிருந்து கப்பல் பிரயாணிகளுடன் உடன் புறப்பட்டுச் சனிக்கிழமை காலை 6 மணிக்கு ராமேஸ்வரத்துக்கு வந்து சேரும். தலைமன்னாருக்கும் ராமேச்வரத்துக்கும் மொத்த தூரம் 32 மைல்கள்தாம். இந்த யாத்திரைக்குக் கப்பல் மூலம் 15 மணி நேரம் ஆகுமாம்!

0 0 0

### திருநெறிய தெய்வத் தமிழ்

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு தருமபுரம் ஆதீன ஆதரவில், சென்ற சனிக்கிழமை, சுகாதார அமைச்சர் அன்பழகனால் ஆரம்பிக்கப் பெற்றது. மதுரை பல்கலைகழகத் தமிழ்த் தலைவர் அ. ச. ஞானசம்பந்தமும் அண்ணாமலை பல்கலைக்கழக மொழி இயல் இயக்குனர் திரு அகத்தியலிங்கமும் பேசினர். சோமசுந்தர தம்பிரான் அவர்கள் வரவேற்றார். 50 தமிழறிஞர்கள் இதில் கலந்துகொள்கிறார்கள் பத்து நாட்கள் நடைபெறும் இம் மாநாட்டில் சைவசித்தாந்த வகுப்புகளும் நடைபெறுகின்றன.

0 0 0

### தமிழில் அர்ச்சனை

இன்னும் இரண்டு மாதங்களுக்குள் தமிழகத்தில் எல்லாக் கோவில்களிலும் தமிழிலேயே அர்ச்சனை செய்யப்படுமாம். இவ்வாறு தர்மஸ்தாபன அமைச்சர் திரு. கண்ணப்பன் தெரிவிக்கிறார். இப்போது பல கோவில்களிலும் சமஸ்கிருதத்தில்தான் அர்ச்சனை நடைபெறுகிறது. விரும்புபவர்கள் தமிழிலும் அர்ச்சனை செய்விக்கலாம். ஆனால் இனி பொதுவாக எல்லாக் கோயில்களிலும் தமிழில் தான் அர்ச்சனை நடக்குமென்றும் விரும்புபவர்கள் சமஸ்கிருதத்தில் செய்விக்கலாமென்றும் கோயம்புத்தூரில் அமைச்சர் பேசுகையில் தெரிவித்தார்.

கரமடை ஸ்ரீ ரங்கநாதர் கோயில் ஆதரவில் எளிய குழந்தைகள் பராமரிப்பு விடுதியொன்று ரூ 15 ஆயிரம் செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் சேர்க்கப்பட்ட 30 குழந்தைகளில் 27 பேர் ஹரிஜனங்களாவர்

## வட்டாரம் தோறும் சிறுவர் பூங்கா

யாழ்.மேயர் முயற்சி

குருநகர், ஞாயிறு

யாழ் மாநகர சபையின் ஒவ்வொரு வட்டாரத்திலும் சிறுவர் பூங்கா அமைப்பதற்கான திட்டமொன்றை உருவாக்குவதற்கு யாழ். மேயர் அல்பிரட் துரையப்பா நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிகிறது.

வாடகைக்கு
கடைக்கட்டிடம் - உடன் கிடைக்கும்
சகல வசதிகளும் கொண்ட விற்பனை நிலையம்; 8-வது கட்டை பலாலிவீதி, கோண்டாவிலில் இ.போ.ச. டிப்போவிற்கு எதிராக. விரும்புபவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.
எஸ். நரசிங்கம் ஜே. பி.
நிகோந ஏல நிலையம்
1-வது மாடி, சங்கரப்பிள்ளை கட்டிடம்
166, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

# பேரிலக்கியம் நாவலன்கோவையும் ஆசிரியர் கந்தமுருகேசனும்

ஆழியில் அலைம்போர்த்த அலைகடல் வடிந்தொதுங்க மலைதோன்றி நிலந்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த தமிழ் காத்து வளர்க்கும் முதன்மை பெற்ற தென்புலோலியூரில், ஆயிரத்துத் தொளாயிரத்திரண்டாம் ஆண்டில் கந்தப்பு-தெய்வானை என்பார்க்கு ஐந்தாவது பிள்ளையாகப் பெருமைசால் முருகேசனார் பிறந்தார்.

கருவிலே திருவுடையரான கந்தமுருகேசனார் 5ம் வகுப்போடு பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தார். வறுமை வாட்டவும் பொறுமைதளராது கைத்தொழில் செய்து வாழ்வை ஓட்டினார். இலக்கணம் இலக்கியம் தருக்கம் கணிதம் என்றின்ன கலைகளைத் தாமாகவே கற்றுத் தெளிந்தார். கந்த முருகேசனார் தாம் தொகுத்து வகுத்த நூல்களிலெல்லாம் பகுத்தறிவைத் திரட்டிய பண்பாளர்; "கற்றனைத் தூறும் அறிவு", கற்ற நூலளவேயாகும் நுண்ணறிவு' என்ற சான்றோர் உரைக்குச் சான்றாக விளங்கியவர் இவர்.

சில ஆண்டுகள் புற்றளைப் பள்ளியிலே கற்றவர் வியக்கும் வண்ணம் கல்வி புகட்டினார். அக்காலத்தில் அவரை இருக்கை முடமாக்கி இயற்கை விளையாடியது. கால்கைமுடமான போதும் திடமான நெஞ்சத்தால் மடமையை உடைத்தெறியும் மாவீரனாகவே திகழ்ந்தார். திண்ணைப்பள்ளி நடத்தி மக்கள் அறிவுக்கண்ணைத் திறந்தார். பழைய திண்ணையிலே புதிய கருத்துக்கள் வழங்கப்பட்டன. முதியவர் இளையவர் புதியவர் யாவரும் அவரிடம் பயின்றனர். நாத்திகம் பேசிய அந்த நரைக்கிழவன், உருவத்தில் கிரேக்க ஞானி சோக்கிரட்டீசுபோல காட்சிதரும். வெண்டாடி அலைய, விழியில் ஒளிவீச தாமரைமுகத்திற் செவ்விதழ் தேன்றமிழ் சிந்தும் இன்சொல் விருந்தோம்பல் இரக்கம் ஈகைஎன்ற குணங்களின் கொள்கலம் அவர். மூச்சும் பேச்சும் முத்தமிழ் முக்கென்றே வாழ்ந்தனர்.

"கந்தமுருகேசனார்கண்டே
ஒருதினம்யான்
பைந்தமிழின் கல்விப்
பரப்பனைத்தும்-
இந்நிலம்
ஒருருவ மெய்தியதென்
றுள்ளினேன் என்று
தொட்டவ்
வாருடுவ முன்புகுந்த
தால்'

இவ்வாறு கந்தமுருகேசனாரைக் கண்டதாகப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறுகிறார்.

## நல்லைநாவலன் கோவை

பகுத்தறிவாளர் கந்தமுருகேசனார் அக்கொள்கையைக் கைக்கொள்ளுமுன் பழுத்த சமயவாதியாக இருந்தார். அக்காலத்து ஆறுமுகநாவலரைப் பாட்டுடைத் தலைவனாக் கொண்டு சொற்சுவை-பொருட்சுவை-தமிழ்சுவை நிறைந்த 'நாவலன் கோவை'யைப்பாடினார். இக்கோவையின் பிற்பகுதி, ஆசிரியர் பகுத்தறிவுக் கொள்கையைத் தழுவிய காலத்துப் பாடப் பெற்றது. 1930 ஆம் ஆண்டளவில் பாடி முடிக்கப்பட்ட கோவையித் துணைக்காலமும் வெளிவராது வருந்தத்திற்குரியதாகும். 492 பாடல்களை உடைய 'நாவலன்கோவை' தமிழணி யிலக்கண நூலார் கண்ட அணிகளுக்கெல்லாம் பேரிலக்கியமாக நின்று அணிசெய்கிறது. இதன் மூலப்படியும் (original copy) ஆசிரியரே செய்த சிரியவுரையும் உடுப்பிட்டியைச் சார்ந்த திரு கா நீலகண்டன் என்பவரிடம் உள்ளன. கந்தமுருகேசனாரின் தமிழ்ப் புலமைக்கும் ஆறுமுகநாவலர் பெருமைக்கும் அழியாதநிலையான சான்றாக அமைந்தது 'நல்லை நாவலன் கோவை'யாகும்.

இங்கே பாவலர் கந்தமுருகேசனார் இயற்றிய 'நாவலன் கோவை'யின் நயன் அறிதற்பொருட்டு சிலபாடல்களையும் அவற்றிற்கு ஆசிரியரின் மாணாக்கருகியவரான் எழுதிய உரையையும் தருகிறேன். இம்மூலப் பாடல்களைத் தந்துதவிய திரு. க. சு. கிருஷ்ணபிள்ளை அவர்கட்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### இறைமகள் இறைவனைக் குறிவரல் விலக்கல்

(தலைவி தலைவனை குறித்த இடத்தில் சந்திக்க வரல் வேண்டாமென விலக்குதல்)

என்னின நீரை அவாவி
இரவி இயலரிய
கன்னில இட்டரும் அச்சச்
சுவைதரு கங்குநெறி
மன்னில தாகொடி தின்
னுமை வேண்டின் இர
வெழுக

பார்ப்பார் - பார்ப்பாரா கிய கண்கள். பிராணைரி, அத்தம் - கை, பொருள். தனத்தர் - கொங்கைகள், செல்வத்திற்குரிய வணிகர்.

என்றலை சொல்லறியாய்
கொனந் நாவல னேரண்
ணவே.

பொருள்: நமது நாவலனை ஒத்த தலைவரே, என்னின மைத் தன்மையை விரும்பினாயினும் இயங்கமுடியாததாகிய மலைநிறைந்ததே அச்சச்சுவை தருவதாகிய இரவில் ஒடுங்கிய கொடிய வழியில் பொருந்திவரின் அய்து ஆகொடிது. 'இன்னுமை வேண்டி இரவெழுக' என, ஆன்றோர் கூறிய சொல்லை அறியாயோ?

நான்மணிக்கடிகை என்னும் கீழ்க்கணக்கு நாலின் வரும் 'ஒருவன் துன்பத்தை விரும்பினன் இராதலுக்குச் செல்லானுக' என்ற பொருளுடைய தொடரை துன்பத்தை விரும்பினவ் இராக்காலத்திற் செல்லானுக என்ற கருத்தில் அமைத்த ஆசிரியரின மதிநுட்பம் நினை தொறும் நினைதொறும் உவகை ஊட்டுகிறது. இளநீர் என்பதற்கு இளநீரை ஒத்த கொங்கைகள் என்று ரைப்பினும் அமையும்.

### நாய் துஞ்சாமை

[நாய் உறங்காமல் தலைவனைத் துரத்தியமை சாற்றல்]

நட்புக்குக் காட்டுச்சமணருக்
காயது நாடுமில்லத்
துட்புக்குக் கள்ள விடாதது
ஊதியம் இன்றிவைகா
வற்புக்குத் தொன் மொழி
தந்திழி வானது
வல்லெவ் குரை
யிற்புக்குக் காதலவர்க்கடி
யுந்நா வலனலைக்கே.

பொ-ள்: நாவலன் நல்லையிலே, (நாலடியாரைச் செய்த) சமண முனிவர்களால் நட்புக்கு உதாரணமாகக் காட்டப்பட்டதும், விரும்பும் இல்லத்துட் புகுந்து களவுசெய்யவிடாததும், எவ்வித ஊதியமும் பெறுமல் வைக்கோற்போரைக் காவல்செய்யப் போய் பழமொழி ஒன்றை உருவாக்கி இழிவுபெற்றதுமான நாய் 'வள்வள்' என்ற குரைப்போடு புகுந்து கள்ளரையும் துரத்தும், யானை பனையவர்

நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக்
கொளல் வேண்டும்--யானை
அறிந்தறிந்தும் பாகனையே

கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கு
நாய்—(நாலடியார்)

'வைக்கோற் பட்டடை நாய்'—பழமொழி.

சம்பளம் இல்லாத உத்தியோகம் பார்க்கப் போய்ப் பட்டம் கேட்டது நாய் என்று நகைச்சுவை ததும்ப ஏற்ற இடத்தில் பழமொழி கூறிக் காட்டுதல் இன்பம் பயக்கிறது.

### கண்டோரிரக்கம்

தலைவி தலைவனுடன் போனபோது கண்டோர் இரங்கிக் கூறுதல்.

பாங்கி புலம்பிடக்
கோடாய் பரியப் பசுங்கிளை
நொந்
தேங்கி பனைபனையென்றே
புலம்ப வியலறிஞர்த்
தாங்கு பறமுக வல்லை
யுழ்கொனத் தானிடி கேட்
டேங்கு மராவென வென்
படு மென்படுமீன்றவளே.

பொ-ள்: அகன்ற அறிவு படைத்த அறிஞரைத் தாங்கு பவனுகிய ஆறுமுகனின் நல்லையை அடையாதார் (பகைவரை) போல, தோழிபுலம்பவும், செவிலித்தாய் இரங்கவும் தான் வளர்த்த பசிய கிளிகள் நொந்து ஏங்கி "அன்னையே அன்னையே" என்று புலம்பவும் செல்கின்றனரே. இவளை ஈன்ற தாய் இடியேறு கேட்ட அரவுபோல ஏங்கி என்னபடுவாளோ? என்ன படுவாளோ?

என்படும் என்படும் என்பது இரக்கக் காரணமாக வந்த அடுக்கு இச்செய்யுள் அழுகைச் சுவையை அழகாகக் காட்டுதல் உணர்க.

[இன்று கந்தமுருகேசனார் நினைவு நாளையொட்டி இக்கட்டுரை வெளியாகிறது.]

### வண்டோச்சி மருங்கணைதல்

(தலைவி கூந்தலில் மொய்க்குந் தேன்வண்டுகளைத் துரத்துவான் போல அவள் அருகிற் செல்லுதல்)

பிறப்பறு மெய்ந்நெறி
கண்டான் அறுமுகன் பேண்
நகுலச்
சிறப்புறும் ஓங்கல் அளி
காள் நடுவறச் சேர்ந்திரி
வலி
கறுத்தெளி கூமுமகி
தாரணி யாள்செவல் கண்ணி
விரே
வெறுத்துநல் லார்பழி
கள்ளுண்டு கூழை விரும்
புதிரே

பொருள்: பிறப்பை அறுக்கும் மெய்ந்நெறியைக் கண்டவனுகிய ஆறுமுகக் பேணும், கிரி எனும் பெயராற் சிறப்புற்ற மலையில் (கிரிமலை) உள்ள வண்டுகளே நடுநிலையற்று இவ்விடஞ் சேர்ந்தீர்; இருள், கறுத்து ஒளி மிகுந்த கூந்தலாகிய இருளிலே மாலையை அணியாத செயலை, நீர் எண்ணவில்லையே. நல்லவர் வெறுத்து இகழ்கின்ற கள்ளை (தேனை) உண்ட மயக்கத்தாற் போலும் மலரற்ற கூந்தலையும் விரும்புகிறீர்.

இடைமுறியும் என்ற காரணத்தால் கூந்தலிலே மாலைசூடாளாகவும் வண்டுகள் கள்ளை உண்ட மயக்கத்தால் அவ்விடஞ் சேர்ந்தன. கூழை கூந்தல். கள்ளுண்டவர் கூழை (ஓடியற்கூழ்) விரும்புவது இயல்பு என்ற நயம் அறிந்தின்புறற்பாலது.

### இகையூறு கிளத்தல்


(அவன், தலைவனை நாணித் தன் கண்களைப் பொத்தியதால் தலைமகற்கு ஏற்பட்ட துன்பத்தை உரைத்தல்)

முன்னவர் பார்ப்பார்
அவர்மணி அத்தம் முழுதுற
வும்
பின்னர் தனத்தர்
வெளியே திரிவது பேருலக
மன்ன வரோதயன் ஆறு
முகனார் மலி வரையில்
என்ன புதுமை இயம்பு
நலையனை ஏந்திழையே.

பொருள்: நல்லையை ஒத்த பெண்ணே, பேருலக மன்னன் வரத்திலுதித்தவனுகிய ஆறுமுகனது சிறந்த மலையிலே முதன்மையானவராகிய கண்கள் மணிபோலும் கைகளை முழுதாகப் பொருந்த பின்னே உள்ள கொங்கைகள் (மறைக்கப்படாமல்) வெளியே தெரிவது, என்ன புதுமை? இயம்புவாயாக!

முதற் குலத்தவராகிய (செல்வ நிலைபெருத) பிராமணர் மணியையும் பொருளையும் முழுதாகப் பெறவும் அவர்க்குப் பிற்பட்ட குலத்தவராகிய (பொருளுக்குரிய) வணிகர் (பொருளின்றி) வெளியே திரிதல் என்ன புதுமை? என்னும் சிலேடைப் பொருளும் அமைந்துள்ளமை காண்க.

— தென்புலோலி, பண்டிதர் வீ. பரந்தாமன் —

அறவே களைகளை அழிக்குமென நிரூபிக்கப்பட்ட சேர்கோப்பூர் 36%, 3.4 டீ.பீ.ஏ. கொண்டது. 35% முதல் 75% வரை அது விளைச்சலைப் பெருக்கும் நெல் விதைத்து 7-21 நாட்களுள் அதைப் பாவிக்க வேண்டும்.

இக் களைகொல்லியைத் தெளிப்பது மிகச் சுலபம்; மிகச் சிக்கனம். சேர்கோப்பூர், பேயர் விவசாய இரசாயனப் பொருள். பேயர் பொருள்கள், ஜெர்மனியில் 100 வருட தொழில் நுட்ப ஆராய்ச்சியின் ஆதாரம் கொண்டவை.

சிக்கனமாக, சிறப்பாகப் பயிர்களைக் காப்பது - சேர்கோப்பூர். அது, களவு செய்ய முடியாத போத்தலிற் கிடைக்கும்.

பசளையைக் களை தின்று விளைச்சலைக் குறைக்கிறதா?



சேர்கோப்பூர் 36%

களைகளைக் கொல்கிறது

BAYER ®

மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்:
பேயர்
மேற்கு ஜெர்மனி.

இலங்கையில் தயாரிப்பவர்:
ஹேக்கெம் லிமிடெட்,
400, டீன்ஸ் வீதி, கொழும்பு-10.
P. 9152 R.

# வட கொரியர்களை வெளியேற்றியது ஏன்

## செனட்டர் கே. எம். பி. கேட்கிறார்

கோட்டை, ஞாயிறு

"சமீபத்திய பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு பிறநாட்டுத் தொடர்பு எந்தவிதத்திலும் இல்லை யானால் இலங்கையிலுள்ள வடகொரிய தூதரக அதிகாரிகளை நாட்டைவிட்டு வெளியேற்றியது ஏன்?"

நேற்றுமுன்தினம் செனட் சபையில் செனட்டர் கே எம் பி இராஜரத்தினம் மேற்கண்ட கேள்வியை எழுப்பினர்.

பொது நிர்வாக உள்ளுராட்சிமன்ற உள்நாட்டு விவகார அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா லண்டனில் இலங்கையில் நடைபெற்ற சமீபத்திய குழப்பத்துக்கு எந்தவித வெளிநாட்டுத் தொடர்பும் இல்லையெனத் தெரிவித்ததைபடுத்தே செனட்டர் ராஜரத்தினம் மேற்படி கேள்வியைக் கேட்டார்.

அரசாங்கம் 'தன் சொந்த நலனை'க்கருதியே வடகொரிய தூதரையும் அத் தூதரக ஊழியரையும் வெளியேற்றத் தீர்மானித்தது என அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்ட செய்தியை திரு. ராஜரத்தினம் சபையில் சுட்டிக் காட்டினர்.

வடகொரிய தூதரகத்தின் மேல் இத்தகையதொரு நடவடிக்கையெடுக்கத்தக்க அளவு தூதரகம் என்ன குற்றம் செய்தது என நாடு அறிய ஆவலாக இருக்கிறது என திரு. ராஜரத்தினம் மேலும் கூறினர்.

# துன்னாலை மித்திலகரை வாய்க்கால் திருத்தப்படும்

யாழ்ப்பாணம் திங்கள்

இரண்டு மைல் நீளமான மித்திலகரை வாய்க்காலை சிரமதான மூலம் திருத்தி அமைப்பதற்கு துன்னாலை தெற்கு கிராமமுன்னேற்றச் சங்கத்தினர் முன்வந்துள்ளனர்

மாரிகாலங்களில் இவ் வாய்க்கால் வழியாக வெள்ளம் தேங்கி வீடுகளுள் புகுந்து பெருந்த சேதங்களை விளைவிக்கின்றது. இதனுல் இப்பகுதியில் வாழும் சிறுபான்மைத் தமிழர்கள் குடியிருக்கமுடியாமல் அடிக்கடி குடும்பம் குடும்பமாக வேறு இடங்களுக்குக் குடிபெயரும் நிலைமை ஏற்படுகிறது. இந்த அவல நிலையை நீக்கி சிரமதான மூலம் இவ் வாய்க்காலைத் திருத்தம் செய்து, இப்பகுதி மக்கள் கஷ்டமின்றிக் குடியிருக்க ஏற்பாடு செய்யவேண்டுமென துன்னாலை தெற்கு கிராம முன்னேற்றச் சங்கக்காரியதரிசி திரு எஸ், செல்லையா வடமராட்சி தெற்கு மேற்கு காரியாதிகாரி திரு. ஜெயகாந்தன். யாழ். கிராமாபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவைப் பகுதியினர் ஆகியோரிடம் விண்ணப்பித்திருந்தார். அவர்கள் வேண்டுகோளை ஏற்று வேண்டிய உதவிகளைச் செய்ய முன்வந்துள்ளார்களாம்

# மற்ரெரு 'தலைவன்' அகப்பட்டான்!

கோட்டை, ஞாயிறு

சரணடைந்துள்ள பயங்கரவாதிகள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து காலி மாவட்டத்திலுள்ள பயங்கரவாதத் தலைவர்களில் ஒருவரான சமரபால கைது செய்யப்பட்டுள்ளார்.

தம்புத்தேகம பகுதியில் பயங்கரவாதிகள் கடைகளிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் உணவுப் பொருள்களைக் கைப்பற்றி காடுகளிலுள்ள தங்கள் மறைவிடங்களுக்கு எடுத்துச்செல்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரத்திலுள்ள காடுகளில் ஆங்காங்கே தங்கியுள்ள 'பயங்கரவாதி'களை வேட்டையாடுவதில் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர். அனுராதபுரத்தில் இராணுவத்தினரைத் தாக்கிய பயங்கரவாதிகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# ஆங்கிலப்படத்தில் இலங்கைத் தமிழருக்குச் சந்தர்ப்பம்

கோட்டை ஞாயிறு

பிரபல ஆங்கில நாவல் ஆசிரியரும். பிரிட்டிஷைச் சேர்ந்த திரைப்பட எழுத்தாளருமான ருேபின் மஹ்கா பிரபு தான் எழுதிய படமொன்றில் நடிப்பதற்கு உயர்ந்த, அழகான கறுத்த நிறமுள்ள ஒரு இலங்கையரைத் தேடுகிருர். கொழும்பில் இப்போது தங்கியிருக்கும் இவர் தேடும் அந்த இளைஞர் தமிழராக இருப்பதையே கூடுதலாக விரும்புகிருர்.

"அழகாக அந்த இளைஞர் காட்சியளிக்கவேண்டும். மிகவும் கறுப்புத் தோலுடையவராகவும் இருப்பது அவசியம். கமிராவுக்கு முன் கூச்சமின்றி நடிக்கவேண்டும்"-இப்படிப்பட்ட இலங்கையர் ஒருவருக்கு அடுத்தவருட முற்பகுதியில் இலங்கையிலேயே எடுக்கவிருக்கும்படத்தில் நடிப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்ருர் அவர்.

இலங்கையிலேயே முழுக்கத் தயாரிக்கப்படவிருக்கும் இப்படத்தின் திரைக்கதைவசனத்தை ருேபின் மாஹ்கா பிரபுவே எழுதியுள்ளார்,

கல்கிசை ஹோட்டலில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

தென்இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் நடந்த இந்தப்படத்திற்கான கதையை எழுதியுள்ளார்,

இலங்கையில் கண்டி மகாராஜாவினுடைய இடத்துக்கு அருமையான இடமாக உள்ளதாக அவர் கூறுகிருர். இடங்களைத் தெரிவு செய்யும் பொறுப்பை தயாரிப்பாளர்கள் இவரிடம் அளித்துள்ளார்கள்.

சிரமதான மூலம்

# கட்டிடம் பூர்த்தி

யாழ்ப்பாணம், திங்கள்

வல்வெட்டி இலந்தைக்காடு எனுமிடத்தில் இளைஞர்களின் சிரமதான முயற்சியில் கட்டப்பட்டு வந்த சனசமூக நிலையம் பூர்த்தியாகியுள்ளது. இதன் திறப்புவிழா இம்மாதத்தில் நடைபெறவிருக்கிறது.

இப்பகுதி இளைஞர்கள் சுமார். இரண்டாயிரம் ரூபா பெறுமதியான வேலையை சிரமதானம் மூலம் செய்துள்ளார்கள். பணம் பொருள் உற்பத்தி நிலையத்துக்கான கட்டடமொன்றையும் இப்பகுதி இளைஞர்கள் இப்போது செய்து வருகின்றுர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(கு.வி.ம.)

# கல்வியமைச்சருக்கு வேண்டுகோள்

உடுப்பிட்டி, ஞாயிறு

மூடப்பட்ட பலாலி பொலிரெக்கிக் பயின்று வந்தவர்த்தகப்பிரிவு இரண்டாம்ஆண்டு மாணவர்கள் தம்மைப் பலாலி ஆசிரியப் பயிற்சிக்கலாசாலையில் அனுமதிக்குமாறு கல்வி அமைச்சரை கேட்டுள்ளனர்.

பலாலி பொலிரெக் மூடப்பட்டதைத் தொடர்ந்து கொக்குவில் பொலிரெக்கிற்கு அங்கு பயின்றுவந்த மாணவர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர், யாழ் தொழில் நுட்பக் கல்லூரி கொக்குவில் பொலிரெக்காகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது தற்போது தமிழ் மாணவர்களுக்கென இலங்கையிலுள்ள ஒரேயொரு பொலிரெக் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# மென்பந்து கிரிக்கெட் போட்டி

மாவிட்டபுரம், ஞாயிறு

கதிர்காமநாதன் வெற்றிக் கேடயத்துக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் இம்மாதம் 15-ம்திகதி ஆரம்பமாகிறது.

தெல்லிப்பழை ஜேயல்கழகத்தின் ஆதரவில் நடைபெற்று வந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரை இறுதிப்போட்டியில் கலந்து கொள்ள 4 கழகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கட்டுவன் திறந்த வெளியரங்கில் நிகழும் இப்போட்டியில் தெல்லிப்பழை ஸ்ரார் விமன் காமம் கைனிங்ஸ்ரார் கட்டுவன்பாலர் ஞானோதயா தொல்புரம் மகனைடி கழகம் ஆகியனபங்குபற்றுகின்றன.

யாழ். நகரில்

# இன்று, நாளை உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் உதைபந்தாட்டச்சங்கத்தின் ஆதரவில் யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப் பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்றும் நாளையும் மறுநாளும் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களின்விபரம் வருமாறு:

இன்று அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் தெல்லிப்பளை இருதயஸ்கோப்பஸ் கழகமும் மோதுகின்றன.

நாளை பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவு கோஷ்டியும் புனிதவளன் 'ஏ' பிரிவுக் கோஷ்டியும் மோதுகின்றன

சென். அன்ரனிஸ் கழகம் இதுவரை கலந்துகொண்ட போட்டிகள் அனைத்திலும் வெற்றிபெற்றுள்ளது. நாளை நடைபெறும் போட்டியிலும் இக்கழகம் வெற்றிபெற்ருல் சென் அன்ரனிஸ் கழகமே 'ஏ' பிரிவில் இம்முறையும் சம்பியனைத் திகழும். சென்றவருடமும் 'ஏ' பிரிவில் சென் அன்ரனிஸ் கழகமே சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

16ம் திகதி வதிரி பொம்பஸ் விளையாட்டுக் கழகமும் சம்சுன் விளையாட்டுக் கழகமும் மோதும்.

(தே. நி)

# கூட்டுறவு முறையில் கருவாட்டு உற்பத்தி

மாவிட்டபுரம், ஞாயிறு

கூட்டுறவு முறையில் கருவாடு உற்பத்தியை பெருக்குவது பற்றி ஆராய யாழ்ப்பாணத்துக்கு கைத்தொழில் பொருளாதார நிபுணர் வந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கரையோரப் பகுதிகளிலுள்ள மீனவர்கள் கூட்டுறவு அடிப்படையில் கருவாட்டை உற்பத்தி செய்ய அரசு உதவிசெய்தால் கருவாடு உற்பத்தியை பெருக்கி அவற்றை வெளி நாடுகளுக்கு அனுப்பக்கூடிய நிலையை உருவாக்கலாம் என்று வடமாகாண கடல் தொழிலாளர் சமாச முன்னுள் தலைவர் திரு எஸ். ஸ்ரானிஸ்லாஸ் கட, தொழில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

இந்த ஆலோசனை பற்றி ஆராய்ந்து இங்குள்ள கருவாட்டை கூட்டுறவு முறையில் அபிவிருத்தி செய்து நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவது பற்றி ஆராய இங்கு வந்துள்ள கைத்தொழில் பொருளாதார நிபுணரும் ஆலோசகருமான பி. மாணிக்கம் சகல பகுதிகளுக்கும் சென்று ஆராய்ந்து வருகிருர்.

யாழ். அரசாங்க அதிபரையும் இவர் சந்தித்துப் பேசினுர்.

# வவனியா கொலை வழக்கு எதிரிக்கு 2 வருடக்கடுழியம்

யாழ்ப்பாணம். திங்கள்

வவனியா கொலை வழக்கில் எதிரிக்கு 2 வருட கடுழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நேற்று நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் வவனியா குளைசப்பிள்ளையார் குளத்தில், 69-ம் ஆண்டு செப்டம்பர் 29-ம் திகதி அழகன் உடையாரை, ஆறுமுகம் மாரிமுத்து என்பவர் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி கைமோசக் கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து. நீதியரசர் தீர்ப்பு வழங்கினுர்.

எதிரிக்காக அட்வகேட் சி. ஆறுமுகம் ஆஜராஞர். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் சந்திரசேகரா ஆஜராஞர். அசைஸ் விசாரணை நேற்றுடன் முடிவடைந்தது.

# வடபகுதி அசைஸ் விசாரணை முடிவடைந்தது

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதி அசைஸ் விசாரணைகள் நேற்றுடன் முடிவடைந்தது நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் அசைஸ் விசாரணை முடிவடைவதையிட்டு சகலருக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார்.

அசைஸ் விசாரணைகள் நல்லபடி நடப்பதற்கு உதவி செய்த சகலருக்கும் நன்றி தெரிவித்த நீதியரசர் வழக்கு விசாரணைகளை முடிப்பதற்கு உதவியாக முடிக்குரிய வழக்கறிஞருக்கும் நன்றி தெரிவித்தார். அசைஸ் நீதிமன்றத்தி உத்தியோகத்தர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

அசைஸ் கிளார்க் திரு. சச்சிதானந்தன், பிஸ்கால் இலாகாவைச் சேர்ந்த திரு. மகாதேவா ஆகியோரின் சேவைக்கும் நன்றி தெரிவித்தார்.

வழக்கறிஞர்கள் அளித்த இந்த ஒத்துழைப்பைப் பற்றி குறிப்பிட்ட நீதியரசர் சிறந்த முறையில் சுருக்கெழுத்தாளர்கள் சேவையாற்றிஞர்கள் என்றும் தெரிவித்தார்.

# 'இறைவனுக்குகந்த நிவேதனம்'

தாவடி, ஞாயிறு

"இறைவனுக்குகந்த நிவேதனப் பொருள் இசையெனின் அது மிகையாகாது இசையின் மூலம் இறைவனிடம் பக்தி கொள்ள இயலும். இனிய தமிழ் இசைப்பாடலாகிய இனபத் தேவாரத்தை அளிளி இறைவனை இடைவருது மகிழ்வித்த பெரியார் ஞானசம்பந்தப்பெருமான். அவர் தந்த சைவதிருமுறைகளை சைவ நன்மக்கள் ஓதுதல் அவசியம்" என தாவடி சைவ இளைஞர் மன்றத்தினரால் கொண்டாடப்பட்ட சம்பந்தர் குருபூசை விழாவில் உரையாற்றிய சைவ இளைஞர் மன்றத் தலைவர் திரு. அ. த. அ. கமலநாதன் கூறினுர்.

# யாழ்தேவியை இங்கு நிறுத்துக

மாவிட்டபுரம், ஞாயிறு

கொழும்பிலிருந்து காங்கேசன் துறைக்கு மாலை 8 மணிக்கு வந்துசேரும் உத்தரதேவியில்வரும் வடபகுதி மக்கள் வரட்டிக்கு சட்டம் நெருங்கும் நேரத்தில் கஷ்டப்படுகின்றனர். இக்கஷ்டத்தை நீக்க உத்தரதேவியை யாழ்ப்பாணத்துக்கும் காங்கேசன்துறைக்குமிடையிலுள்ள சகல நிலயங்களிலும் தரிக்கச் செல்ல உடன்நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் திரு லெஸ்லி குணவர்தனவை தெல்லிப்பழை கிராமசபைத் தலைவர் திரு. எம். சிதம்பரநாதன் கோரியுள்ளார்.

# 225 பைந்து இரத்தம் தேவை

கோட்டை ஞாயிறு

நாடெங்கும் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு 225 பைந்து இரத்தம் தேவையென இரத்தவங்கி அதிகாரி தெரிவித்துள்ளார்.

இரத்தம் வழங்குபவர்களுக்கு தலா 10ரூபா வழங்கப்படும் எனவும் அல்லது பிற்காலத்தில் அவர்களுக்கு இரத்தம் தேவையெனில் பெறத்தக்கவகையில் தொண்டர் இரத்ததான நற்சாட்சிப்பத்திரம் வழங்கப்படும் எனவும் மேற்படி அதிகாரி தெரிவித்துள்ளார்.

மணிவாக்கு

துன்பத்திற்கு காரணம் ஆசையே அதை ஒழித்தால் தான் ஆனந்தம் உண்டாகும். —புத்தர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

திருவள்ளுவர் விரோதிகிருது வருஷம் வைகாசி மாதம் 31-ந் திகதி (14-6-71)


இலங்கையிலே பயங்கரவாதிகளின் இயக்கத்தை வெற்றிகரமாக அடக்கியதற்காகப் பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்கா அவர்களைப் பாராட்டி யாழ்ப்பாண மாநகர சபை, கொழும்பு மாநகர சபை முதலியன ஏகமனதாக நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள் பொதுமக்களின் கருத்தையே முற்றிலும் எடுத்துக்காட்டுகின்றன. பயங்கர இயக்கம் தலைதூக்கியிருப்பின் தங்கள் எதிர்காலம் என்ன ஆகியிருக்குமென்று பொதுமக்கள் அச்சப்படுவதுடன், இந்தப் பெரும் ஆபத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிய தற்காகச் சிறப்பாகப் பிரதமர் ஸ்ரீமா அவர்களை நன்றியுடன் வாழ்த்துகின்றார்கள்.

பயங்கர இயக்கம் பெரிதும் அடக்கப்பட்டு அதன் முதுகெலும்பு முறிக்கப்பட்டுவிட்டதெனினும், இந்த ஆபத்து முற்றாக நீங்கிவிட்டதாகக் கருத முடியாது. இது பற்றி அமைதியையும் ஜனநாயக சுதந்திரத்தையும் விரும்பும் மக்கள் இன்னும் கவனமாக இருக்க வேண்டும். பலாத்கார இயக்கம் இலங்கையில் மட்டுமல்ல, உலகில் பல நாடுகளிலும் நடைபெறுகின்றன. என்றாலும் இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டிலே இந்த விஷத்துக்குச் சிறிதும் இடமளிப்பின் நாட்டிலே மக்களின் சுதந்திரத்துக்கு அது எவ்வளவு பெரும் கேடாக முடியுமென்பதை விளக்கத் தேவையில்லை. பயங்கரவாதிகள் போட்ட திட்டம் தெய்வாதீனமாகப் பிழைத்துவிட்டது. இச்சமயம் தோல்வி ஏற்பட்டதெனினும் மீண்டும் தக்க சமயத்துக்காக இத் தீயசக்தி காத்துக் கொண்டு இருக்கலாம். மற்ற விஷயங்களில் அரசியல் கட்சிகளுக்குள் என்ன வேற்றுமைகள் இருப்பினும், நாட்டின் அமைதியையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்க வேண்டிய இப்பெரும் பொறுப்பில் வேற்றுமை எதுவுமில்லாமல், எதிர்க்கட்சியினரும் பிரதம மந்திரியைப் பாராட்டியுள்ளது மகிழ்ச்சியுடன் வரவேற்கத்தக்கது. எதிர்காலத்தில் இப்பொதுப் பணியில் ஒத்துழைப்பு இருக்குமென்றே எதிர்பார்க்கலாம்.

நாட்டுக்கு ஏற்பட்டிருந்த இப்பெரும் ஆபத்து முறியடிக்கப்பட்டதற்கு மற்றவர்கள் எல்லாரையும்விடப் பிரதமர் ஸ்ரீமாவே பெரிதும் காரணமென்றால் அது மிகையாகாது. தமக்கும் தமது அரசாங்கத்துக்கும், ஏன் நாட்டுக்குமே பெரிய ஆபத்தும் நெருக்கடியும் ஏற்பட்டபோது, மனம் சலியாது, மிக உறுதியுடன் நின்று அத்தியசத் திசைச் சின்னைப் படுத்தியுள்ளார். எந்த நெருக்கடியையும் வெற்றிகரமாக அவர் சமாளிப்பாரென்ற நம்பிக்கைமீது தான் பொதுமக்கள், சென்ற பொதுத் தேர்தலில் அவரை அமோகமான வாக்குகளால் தெரிவு செய்துள்ளனர். அந்த நம்பிக்கை வீண்போகவில்லை. அசாதாரணமான இந்தப் பெரும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கும் மனத்திடம் அவருக்கு ஏற்பட்டது வியக்கத்தக்கது. நெருக்கடியான இச்சமயத்திலே அவருக்கு இவ்வளவு மன உறுதியும் திறமையும் ஏற்பட்டதற்குக் காரணம் அவரது தெய்வ பக்தியும் நம்பிக்கையும்தான் என்று சொல்லப்படுகிறது. காரணம் எதுவாயினும் சரி, எதிர்காலத்திலும் இவ்விஷயமாகப் பொதுமக்களின் ஏகோபித்த அபிமானத்தையும் ஆதரவையும் அவர் பெற்று, நாட்டை நல்வழியில் பத்திரமாகச் செலுத்துவாரென்றே எதிர்பார்க்கலாம். இந்நாட்டிலுள்ள ஒருகோடி இருபது லட்சம் மக்களின் எதிர்கால வாழ்வு, இன்று பிரதம மந்திரி ஸ்ரீமாவோவின் கையில் பெரிதும் தங்கியுள்ளதெனில் அது மிகையாகாது. ஆகவே அவருக்கு இச்சமயம் இவ்விஷயமாக அளிக்கும் ஆதரவு நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் செய்யும் நன்மையாகும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ... வீதி 65-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இந்துசமுத்திர [illegible] பிரதேசத்தில் ஆதிக்கப்புயல்?

இந்துசமுத்திரப் பிரதேசத்தில் பிரித்தானிய சாம்ராஜ்யம் முன்னர் ஆதிக்கம் செலுத்திவந்தது. இந்த ஆதிக்கத்தை ஆசிய ஆபிரிக்க நாடுகள் பல ஆண்டுகளாகப் போராடி ஒழித்தன. இப்பகுதியில் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் செலுத்திய அதிகாரத்தை இன்று மீண்டும் செலுத்த சில நாடுகள் முனைவது யாவரும் அறிந்ததே. வியட்நாமிய போர் புறநாட்டுத் தொடர்புகுறித்து நமக்கு நல்ல பல படிப்பினைகளைத் தந்துள்ளது. இதனால் தென்கிழக்காசியாவில் கொலையும் குண்டுவீச்சும் ஏற்பட்டது. ஆசியாவின் இத்தியாகத்தை நாம் மறக்கக்கூடாது.

அன்னியராதிக்கமின்றிச் சுதந்திரமாக வாழ எல்லா நாடுகளுக்கும் உரிமையுண்டு என்பதை இன்று நாம் அறிவோம். விடுதலைவேண்டி அதற்காகப் போராடுமிடத்து இந்தநாடுகளில் உள்ள சுதந்திரதாகமுள்ளவர்களும் ஏற்கனவே ஏகாதிபத்திய வாதிகளின் கையில் சிக்கிப் பல இன்னல்கள் அனுபவித்து தவித்தவர்களும் ஒன்றுபடுவர். சோஷலிச சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடைய நாம் ஜனநாயகத்திலும், ஆட்சிமன்ற ஆட்சியிலும் நம்பிக்கையுடையவர்கள். எமது நோக்குடைய இந்த நாடுகளை நாம் ஆதரிக்கிறோம். ஆனால் அமைதிப் பிரதேசமாகவிருக்க வேண்டிய இந்துசமுத்திர பிரதேசத்தில் வல்லரசுகள் ஆதிக்கம் செலுத்த எமது மண்டலச் சார்பற்ற கொள்கையைப் பயன்படுத்தவிடக்கூடாது. மண்டலசார்பற்ற தன்மை அரசியல் ரீதியில் ஏகாதிபத்திய வாதிகளால் தாழ்ந்தவர்கள் எனக் கருதப்பட்டு, இதுவரை சுதந்திரமடைந்துள்ள மக்களோடு நட்புறவை ஏற்படுத்தும் உரிமையையளிக்கிறது. மேலும் இது பொருளாதார ரீதியில் பரஸ்பரம் நன்மையடையத்தக்க வகையில் இந்நாடுகளோடு வர்த்தகத்திலீடுபட வாய்ப்பளிக்கின்றது. கலாச்சார ரீதியில் நோக்குமிடத்து ஒருமைப்பாடு, ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையிலான எமது கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுப்பவர்களோடு கருத்துக்களைப் பரிமாறவும் கலாச்சாரத் தொடர்புகொள்ளவும் விரும்புகிறோம்.

மண்டலச் சார்பற்ற கொள்கையை எல்லாநாடுகளும் ஏற்றுக்கொண்டபொழுதும் மேற்கத்திய வல்லரசுகள் உண்மையில் இதை விரும்பவில்லை. அவை இதற்குச் பேச்சளவிலேயே சேவை செய்கின்றன. எனவே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் போன்ற எமது நாடு எமது நோக்கங்களைக் கொண்ட விசேஷமாகத் தென்கிழக்காசிய நாடுகளோடு தொடர்பு கொண்டு நட்புறவையேற்படுத்திக்கொள்ள வேண்டும். இத்தகைய உறவுகளைமூலம் நாம் பொருளாதார சுதந்திரத்தையடையத் தன்னையே தனக்குத்துணையாகக்கொண்டு எமது சுயமுயற்சியிலேயே தங்கியிருக்க வேண்டும்.

நாட்டில் ஏற்பட்ட சமீபத்திய நிகழ்ச்சி மண்டலசார்பற்ற கொள்கையில் மேலும் நாம் தீவிர நம்பிக்கையுடையவர்களாகத் தூண்டியுள்ளது. இந்நம்பிக்கையைமென் மேலும் வலுவடையச்செய்ய அராபியன்கடல், இந்துசமுத்திரம், வங்காளவிரிகுடா ஆகியவற்றின் பிரதேசங்களை அமைதிப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்த எடுக்கப்படும் சகல முயற்சிகளுக்கும் நாம் பூரண ஆதரவளிக்கவேண்டும். அதாவது தென்கிழக்காசிய பிரதேசத்துக்கு ஆதரவளிக்கின்ற நாடுகள் யாவற்றுக்கும் நாம் தீவிரமாக உதவி செய்ய வேண்டும். விசேஷமாக இந்தியாவுக்கு ஆதரவளிக்க வேண்டும் ஏனெனில் இதன் பாதுகாப்பிலேயே எமது நாடு உள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை மனதில் கொண்டுநாம் சமுதாய ரீதியை அடிப்படையாகக் கொண்டதொரு நாட்டை உருவாக்கத் திடசித்தம்பூண வேண்டும். பிறநாடுகளை நோக்கிக் கையேந்திநிற்காது நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து பொருளாதாரசுபீட்சத்துக்கு கடுமையாக உழைக்கவேண்டும். அப்பொழுது தான் நாம் மதிப்போடு மற்றைய நாடுகளோடு ஒன்று சேர்ந்து எமது பாதுகாப்புக்காகப் பாடுபட முடியும்.

## இராணுவ ஒப்பந்தங்கள்

பிரிட்டனும் அமெரிக்காவும் இராணுவ ஒப்பந்தங்களைச் செய்த சில நாடுகளுக்கு ஆயுதங்களை விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளன. ரஷ்ய, சீன கம்யூனிசத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவே தாங்கள் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக இவ்விரு நாடுகளும் தங்கள் செயலுக்குச் சமாதானம் கூறுகின்றன. ஆனால் பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் ஆயுதங்களை அது இந்தியாவுக்கு எதிராகவோ அல்லது சீன, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கெதிராகவோ உபயோகிக்கலாம் அல்லவா? இந்நோக்கில் தோற்கடிக்கப்பட்டு ஆபிரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்ட பிரான்ஸ் இப்பொழுது நெப்போலியன் போனபாட்காலத்தில் இருந்த புகழ்மிக்க பிரான்ஸாகத் திரும்பவும் ஐரோப்பாவில் திகழவேண்டுமென விரும்புகிறது. தங்கள் விவகாரங்களில் வல்லரசுகள் தலையிடாதவாறு தங்களை விடுவித்துக் கொள்ள அராபிய நாடுகள் போராடுகின்றன. சமுதாய நீதிமற்றும் வளர்ச்சிக்கும் வாழ்க்கைக்குமான சகல வாய்ப்புகள் யாவற்றையும் அளித்து 70கோடிமக்களுக்கு சேவையளித்துக் கொண்டிருக்கும் மக்கள் சீனக் குடியரசு ஆபிரிக்காவிலும், ஆசியா முழுவதிலும் தான் தலைமைப் பீடத்தையடைய வேண்டுமென விரும்புகிறது. கிழக்கு-மேற்கு ஆகிய இரு திசையினதும் ஏகாதிபத்தியத்தை ஒழிக்கவியலாத எழுச்சி பெற்றுக்கொண்டிருக்கும் ஆசிய-ஆபிரிக்க நாடுகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பாதுகாப்புக்கும் கூடிய ஆதரவளிக்க வேண்டும். இத்துறையிலும் சுயமுயற்சியையே மூச்சாகக் கொண்டு தன்னம்பிக்கையுடன் முன்னேறிவரும் ஜப்பான், ஆசியநாடுகளுக்கு முன்மாதிரியாக அவைகள் பின்பற்றக்கூடிய நாடாக விளங்குகிறது. எனினும் பசுபிக்சமுத்திரத்தில் வர்த்தகத்தை மேற்கொள்ள ஜப்பான் ஓரளவுக்கு ஐக்கிய அமெரிக்காவைச் சார்ந்து நிற்கவேண்டியுள்ளது.

ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் மறுவாழ்வுக்காகப் பாடுபடும்பொழுது சம்மைச் சுற்றியுள்ள மண்டலச் சார்பற்றநாடுகளின் பொது நோக்கங்களை அறிவது கஷ்டமானதாகவிருக்காது. தற்போதைய நிலைமையில் தேசிய ஒற்றுமை, தியாகம், கடின உழைப்பு, மக்களின் மதிப்பு ஆகியவற்றின் அவசியம் குறித்து எம்மை விழிப்படையச் செய்ய வேண்டும். போட்டா போட்டி மனப்பான்மையுள்ள வல்லரசுகளின் போர்க்களமாக இல்லாத அமைதிப்பிரதேசமாக இந்துசமுத்திரப் பகுதியைப் பிரகடனப்படுத்த இதுவே தக்கசமயமாகும்.

ஐ. நா. பொதுநல அமைப்பு நாடுகள் ஆகியவற்றின் மாநாடுகள் மற்றும் சர்வதேச மகாநாடுகள் ஆகியவற்றிலும் இந்து சமுத்திரப்பிரதேச பிரச்சினை எழும்பொழுது அதை அமைதிப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதே எமது பிரதான நோக்கமாகவிருக்கவேண்டும். ஆதிக்க வெறிக்கு இப்பிரதேசத்தில் இடமளிக்கக்கூடாது.

அலுவலக எழுத்தாளர்.

# சுவீப்முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு

பாணந்துறையில் வைத்து நேற்று முன்தினம் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 350-வது தேசிய சுவீப் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:-

**முதலாம் பரிசு**

07 O 0942 ரூபா 82,960

**இரண்டாம் பரிசு**

11 R 0133 ரூபா 33,184

**மூன்றாம் பரிசு**

35 F 0933 ரூபா 8,296

தலா 414 ரூபா 80 சதம் வீதம் ஆறுதல் பரிசுகளைப் பெறும் 100 டிக்கட்டுகளின் இலக்கங்கள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 33 A 0714 | 18 A 0666 | 09 Q 0048 | 35 Q 0077 |
| 20 A 0159 | 14 A 0657 | 30 Q 0037 | 33 Q 0533 |
| 29 B 0894 | 29 B 0461 | 26 Q 0655 | 33 R 0836 |
| 01 C 0839 | 21 C 0843 | 09 R 0253 | 20 R 0676 |
| 16 C 0865 | 10 C 0252 | 36 R 0540 | 34 S 0771 |
| 06 D 0485 | 11 D 0666 | 10 S 0534 | 33 S 0043 |
| 06 D 0672 | 02 D 0645 | 27 S 0063 | 29 S 0463 |
| 33 D 0372 | 11 D 0697 | 23 S 0182 | 02 T 0525 |
| 03 D 0429 | 09 D 0955 | 03 T 0491 | 24 T 0665 |
| 17 D 0448 | 36 E 0371 | 33 T 0659 | 16 T 0787 |
| 24 E 0567 | 11 F 0458 | 16 T 0002 | 25 U 0314 |
| 27 F 0845 | 07 G 0010 | 17 U 0265 | 34 U 0359 |
| 31 G 0182 | 31 G 0625 | 34 V 0468 | 11 V 0572 |
| 21 H 0124 | 33 J 0648 | 35 V 0272 | 18 V 0030 |
| 19 J 0677 | 25 K 0261 | 36 V 0566 | 05 V 0211 |
| 24 K 0135 | 16 L 0952 | 03 V 0405 | 35 W 0248 |
| 04 L 0150 | 20 L 0533 | 15 W 0948 | 07 W 0314 |
| 13 L 0799 | 22 M 0590 | 18 X 0533 | 02 X 0270 |
| 16 M 0227 | 33 M 0704 | 13 X 0664 | 14 X 0564 |
| 12 M 0374 | 20 N 0065 | 19 Y 0387 | 09 Y 0241 |
| 22 N 0929 | 18 N 0830 | 18 Y 0108 | 36 Y 0066 |
| 25 N 0926 | 25 N 0607 | 19 Y 0496 | 24 Y 0889 |
| 24 N 0293 | 10 O 0679 | 30 Z 0076 | 14 Z 0783 |
| 36 O 0443 | 29 P 0105 | 18 Z 0371 | 05 Z 0164 |
| 36 P 0246 | 33 P 0592 | | |
| 23 P 0540 | 34 Q 0549 | | |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.)

## ஜெர்மன் டெலிபிறிண்டர்கள்

கோட்டை, ஞாயிறு

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு இலங்கைக்கு 50 டெலிபிறிண்டர்களை வழங்கவுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் இலங்கைக்கும் ஜனநாயக ஜெர்மன் குடியரசுக்குமிடையே சமீபத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ்வொப்பந்தத்தின் கீழ் 200,000 தொலைபேசிகளும் பெறப்படவுள்ளன.

## வாலிபன் தற்கொலை

குருநகர், ஞாயிறு

சரசாலையைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் கிளிநொச்சியில் தற்கொலைசெய்து கொண்டார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்தது. நவரத்தினம் என்ற 21 வயதுவாலிபரின் இம்மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய கிளிநொச்சி மரண விசாரணை அதிகாரி திருமி நாசினி அருந்தியதால் ஏற்பட்டமரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## விரிவுரைகள்

கோட்டை, ஞாயிறு

ஆவணிமாத நடுப்பகுதியில் பல்கலைக்கழக கலைப்பிரிவின் இறுதி ஆண்டில் பயிலும் மாணவர்களுக்கான விரிவுரை வகுப்புகள் ஆரம்பமாகும், இதற்கான திகதி பின்பு அறிவிக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.